Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, MAY 08, 2025


வியாழக்கிழமை 08, மே 2025 | ஒளி: 10 கதிர்: 234 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

### வடக்கு, கிழக்கில்

# திசைக்காட்டிக்கு பலத்த அடி

**Local Authorities Election 2025**

| Party | Votes | % | LG bodies | Members |
|---|---|---|---|---|
| NPP | 4,503,930 | 43.26% | 265 | 3,926 |
| SJB | 2,258,480 | 21.69% | 14 | 1,787 |
| SLPP | 954,517 | 9.17% | 0 | 742 |
| UNP | 488,406 | 4.69% | 0 | 381 |
| PA | 387,098 | 3.72% | 0 | 300 |
| ITAK | 307,657 | 2.96% | 35 | 377 |
| SB | 294,681 | 2.83% | 0 | 226 |
| SLMC | 139,858 | 1.34% | 6 | 116 |
| DTNA | 89,177 | 0.86% | 1 | 106 |
| ACMC | 75,268 | 0.72% | 3 | 60 |
| CWC | 71,655 | 0.69% | 2 | 54 |
| ACTC | 70,944 | 0.68% | 3 | 101 |
| IND2 | 66,901 | 0.64% | 0 | 64 |
| PSA | 50,492 | 0.48% | 0 | 16 |
| TMVP | 39,791 | 0.38% | 1 | 37 |
| NFF | 39,443 | 0.38% | 0 | 26 |




*NPP - National People's Power, SLPP - Sri Lanka Podujana Peramuna, Samagi Jana Balawegaya, SLPP - Sri Lanka Podujana Peramuna, UNP- United National Party, PA -People's Alliance, ITAK -Ilankai Tamil Arasu Kadchi, SB-Sarvajana Balaya, SLMC - Sri Lanka Muslim Congress, DTNA- Democratic Tamil National Alliance, ACMC- All Ceylon Makkal Congress, CWC- Ceylon Worker's Congress, ACTC -All Ceylon Tamil Congress , IND2 -Independent Group 2 , PSA -People's Struggle Alliance , TMVP -Tamil Makkal Viduthalai Pulika , NFF -National Freedom Front*

## பல மன்றங்களில் தனித்து ஆட்சியமைப்பதிலும் சிக்கல்

உள்ளூராட்சி மன்றங்களில் 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு, செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்று, அவற்றுக்கான பெறுபேறுகள், புதன்கிழமை (07) பிற்பகல் வேளையில் உத்தியோகப்பூர்வமாக விநியோகித்து முடிக்கப்பட்டன.

வடக்கில் இலங்கை தமிழரசுக்கட்சியின் கையும். கிழக்கில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கையும் ஓங்கியிருக்கின்றது. மலையகத்தைப் பொறுத்தவரையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி உள்ளிட்ட கட்சிகள், குறிப்பிடத்துக்களவு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி (NPP) 4,503,930 வாக்குகளையும் (43.26%) இலங்கை முழுவதும் 3,927 இடங்களையும் பெற்றுத் தெளிவான வெற்றியைப் பெற்றுள்ளது. 23 மாநகர சபைகள், 26 நகர சபைகள் மற்றும் 217 பிரதேச சபைகள் உட்பட 266 உள்ளூராட்சி மன்றங்களில் அந்தக் கட்சி முன்னிலை வகிக்கிறது.

தொடர்ச்சி P2

# கொழும்பின் மேயர் யார்?

### 50 வருடங்களுக்கு பின் ஐ.தே.க. இழந்தது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கொழும்பு மாநகர சபையில் (CMC) எந்தக் கட்சியும் தெளிவான பெரும்பான்மையைப் பெறாததால், கொழும்பின் அடுத்த மேயருக்கான தெரிவு, உறுப்பினர்களின் வாக்கெடுப்பின் ஊடாக தெரிவு செய்யப்படவுள்ளது.

119 இடங்களில் 48 இடங்களை தேசிய மக்கள் சக்தி வென்றுள்ளது. இது, பெரும்பான்மையைப் பெறவும், ஒரு சபையை அமைக்கவும் தேவையான 60 இடங்களை விட குறைவாகவே உள்ளது.

தொடர்ச்சி P2



# கெஹலிய மீண்டும் கைது



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆணைக்குழுவில் புதன்கிழமை (7) அவர் வாக்குமூலம் அளித்ததன் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# “திசைக்காட்டி கைகோர்க்காது”



அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளுடன் கைகோர்த்து சபைகளை தேசிய மக்கள் சக்தி நிறுவாது என்று ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா புதன்கிழமை (07) தெரிவித்தார்.

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற விரும்பும் தனிநபர்களின் சுயாதீன குழுக்களை, தேசிய மக்கள் சக்தி பரிசீலிக்கும் என்றார்.

தொடர்ச்சி P2

# “ஒன்றிணைத்த பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்குவோம்”



அவமானங்கள், அச்சுறுத்தல்கள், சேறு பூசும் வார்த்தைகள், சதித்திட்டங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து ஆதரித்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நமது நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த முன்வந்து இந்தத் தேர்தலுக்கு ஒத்துழைப்பை நல்கிய நமது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### களுபோவில மருத்துவமனையில்

# கேட்பாரற்று கிடக்கும் 28 சடலங்கள்

களுபோவில போதனா மருத்துவமனையில் இறந்தவர்களின் சுமார் 28 சடலங்களை, அவர்களின் உறவினர்கள் மற்றும் பாதுகாவலர்கள் முன்வராததால், இரண்டு மாதங்களாக மருத்துவமனையின் பிணவறையில் வைக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

### தமிழரசுக் கட்சிக்கு

# “தனி பலம்”



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாகப் பலமாக இலங்கை தமிழரசுக் கட்சி வெளிவந்திருக்கின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல்களிலே தேசிய மக்கள் சக்திக்கு

தொடர்ச்சி P2



### பயங்கரவாதிகளின் 9 முகாம்கள் மீது இந்தியா

# வான்வழி தாக்குதல்

### பாகிஸ்தானும் பதில் தாக்குதல்

**அமைதியைக் குலைக்கவும் மதக் கலவரங்களைத் தூண்டவும் திட்டமிட்டு இந்த பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது**

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள பயங்கரவாத அமைப்புகளின் 9 முகாம்களைக் குறிவைத்து ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் இந்தியா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக, இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புதன்கிழமை (07) நள்ளிரவுக்குப் பின்னர் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கூறியதாவது,

“ஆபரேஷன் சிந்தூர்’ மூலம் பயங்கரவாதத்தின் மீது பதிலடி கொடுக்கும் நமது உரிமையை நிலைநாட்டியுள்ளோம்” என்று கூறினார்.

தொடர்ச்சி P2




# 3,000 நாட்களை எட்டியது ஆர்ப்பாட்டம்

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் 3,000 நாட்களை, புதன்கிழமையுடன் (07) எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(மேலதிக செய்திகள் 3ஆம் பக்கம்)

# “என் பேச்சை கேட்டிருந்தால் எதிரணிக்கு அமோக வெற்றி”

**இளைய தலைமுறையினர் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும்**



தான் அறிவுறுத்தியபடி ஐம்பது முதல் நூறு உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட்டிருந்தால், எதிர்க்கட்சிகளின் கூட்டணி கணிசமான இடங்களை வென்றிருக்க முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கொழும்புக்கு இதுபோன்ற ஒன்றைச் செய்திருக்க வேண்டும் என்று கூறிய ரணில் விக்ரமசிங்க, தான் சொன்னது போல் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடாததால் மக்கள் பிளவுபட்டுள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2



# ராஜபக்ஷக்களின் கோட்டையில் அனுர



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷக்களின் கோட்டையான மெதமுலன தேர்தல் தொகுதி, 2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் விழுந்தது.

வீரக்கெட்டிய பிரதேச சபைக்குரிய மெதமுலன தேர்தல் தொகுதியில் 1,115 வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 768 வாக்குகளை பெற்றது.

அரசியலில் மெதமுலன அதிகாரத்தை ராஜபக்ஷக்களே வைத்திருந்தனர். எனினும், இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அந்த அதிகாரம் இல்லாமல் போய்விட்டது.

# பிரசன்னவுக்கு விளக்கமறியல்



திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், புதன்கிழமை (07) நீதிமன்றத்தில் சரணடைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மஹர பிரதான நீதவான் காஞ்சனா டி சில்வா உத்தரவிட்டார். கிரிபத்கொட நகரில் உள்ள அரசாங்க காணி மோசடியான ஆவணங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்ய அனுமதி

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# திசைக்காட்டிக்கு பலத்த அடி

சமகி ஜன பலவேகய (SJB) 2,258,480 வாக்குகளையும் (21.69%) மற்றும் 1,767 இடங்களையும் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது, 13 சபைகளில் முன்னிலை வகிக்கிறது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) 954,517 வாக்குகளுடன் (9.17%) 742 இடங்களைப் பெற்றது, ஆனால் எந்த சபையிலும் தலைமை தாங்கத் தவறிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி (UNP) 488,406 வாக்குகளையும் (4.69%) 381 இடங்களையும் பெற்றது, எந்த சபைகளிலும் முன்னிலை வகிக்கவில்லை. இதற்கிடையில், இலங்கை தமிழரசுக் கட்சி (ITAK) 377 இடங்களைப் பெற்று 37 சபைகளில் முன்னிலை வகிக்கிறது, மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) 116 இடங்களைப் பெற்று 5 சபைகளில் முன்னிலை வகிக்கிறது. மக்கள் கூட்டணி 300 இடங்களிலும் சர்வஜன பலய 226 இடங்களைப் பெற்றன..

கடந்த ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது, தேசிய மக்கள் சக்தி பெற்றிருக்கும் வாக்குகளின் எண்ணிக்கை குறைவாகும். இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் வாக்கு வங்கி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

## வான்வழி தாக்குதல்

மேலும், “இந்தத் தாக்குதலில் பாகிஸ்தானில் பயிற்சி மேற்கொண்ட பயங்கரவாதிகள் ஈடுபட்டதை இந்தியா உறுதி செய்தது. உளவுத் துறை அவர்களின் துல்லியமான புகைப்படங்களையும் வெளியிட்டது.

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பரில் மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் உள்நாட்டில் பொதுமக்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் பஹல்காம் தாக்குதல். இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பா ஆதரவு பெற்ற ‘ரெசிஸ்டன்ஸ் ஃபோர்ஸ்’ என்ற அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் திரும்பிவரும் இயல்பு நிலையை சிதைக்கவும், வளர்ந்துவரும் சுற்றுலாத் துறையை முடக்கவும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து அங்கு நிலவும் அமைதியைக் குலைக்கவும், மதக் கலவரங்களைத் தூண்டவும் திட்டமிட்டு இந்த பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பல்வேறு பயங்கரவாதக் குழுக்களின் புகலிடமாக இருக்கிறது என்பது உலகம் அறிந்ததே. இந்நிலையில், பல்வேறு தருணங்களில் இந்தியாவும் ஐ.நா. சபையிலேயே பாகிஸ்தான் பயங்கரவாதத்தை தனது நாட்டு எல்லைக்குள்ளேயே ஊக்குவிப்பதை எடுத்துக் கூறி கண்டித்துள்ளது.

இந்தச் சூழலில்தான் பஹல்காம் தாக்குதலும் நடந்துள்ளது. இந்தத் தாக்குதலுக்கு அடுத்த நாளே பாகிஸ்தான் மீது இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாகிஸ்தான் மீதான நடவடிக்கைகளை அனைவரும் அறிவர். ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு எதிர்வினை ஆற்றுவதும், குற்றச்சாட்டுகளை மறுப்பதும், பொறுப்பற்ற அறிக்கைகளை விடுவதுமாகவே பாகிஸ்தான் இருந்தது.

இந்தநிலையில்தான், பஹல்காம் தாக்குதல் நடந்த 15 நாட்களுக்குப் பின்னர் திட்டமிட்டு, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை மட்டுமே வெகு நேர்த்தியாக குறிவைத்து, பொறுப்புடன் தாக்குதல் நடத்தியுள்ளோம்.

“அங்குள்ள 9 முகாம்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையின் மூலம் பயங்கரவாதத்தின் மீது பதிலடி கொடுக்கும் நமது உரிமையை நாம் நிலை நாட்டியுள்ளோம்” என்றார்.

முன்னதாக, இந்தியா - பாகிஸ்தானின் சர்வதேச எல்லைப் பகுதியான எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு (எல்ஓசி) அருகே பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில், இந்தியக் குடிமக்கள் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 7 பேர் இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய குடிமக்கள் 3 பேர் பேர் உயிரிழந்தனர்; 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

பிரான்சில் தயாரிக்கப்பட்ட ரபேல் ரக விமானங்கள் மூன்றையும், மிக் 29 விமானம் ஒன்றையும், எஸ்யு 30 போர் விமானமொன்றையும் தற்பாதுகாப்பிற்காக சுட்டுவீழ்த்தியுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஆளில்லா விமானமொன்றையும் சுட்டு வீழ்த்தியுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

## கேட்பாரற்று கிடக்கும்...

28 பேரின் உடல்களை நீண்ட காலத்திற்கு சேமித்து வைப்பதற்கு குளிர்சாதன வசதிகள் இல்லாததால், 11 சடலங்கள் பல நாட்களாக வெளியே கிடப்பதாகவும் வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

மொரட்டுவ 04, பிலியந்தல 04, அகுலான 04, மிரிஹான 02, வெலிகட, மஹரகம, பம்பலப்பிட்டி, கிருலப்பனை மற்றும் கொஹுவல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட இறந்தவர்களின் சடலங்கள், பாதுகாவலர்கள் பிரேதப் பரிசோதனைகளுக்கு முன்வராத காரணத்தால், இரண்டு மாதங்களாக இவ்வாறு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த 1990ஆம் ஆண்டு அம்பியூலன்ஸில் இருந்து வீதியில் விழுந்ததால் சிலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், மேலும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, உறவினர் மற்றும் பாதுகாவலர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் வழங்கிய முகவரிகள் போலியானவை என்றும், சிலரிடம் எந்த அடையாள ஆவணங்களும் இல்லை என்றும், இதன் விளைவாக, அவர்களின் பாதுகாவலர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் உடல்கள் குவிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த சடலங்கள் 40 முதல் 85 வயதுக்குட்பட்டவையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சடலங்களை வெளியில் சேமித்து வைப்பதால் பல உடல்நலப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும், பிணவறையின் அன்றாட நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

அடையாளம் தெரியாத இந்த சடலங்களின் பாதுகாவலர்கள் அவற்றைப் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்ப விரும்பினால், பொதுமக்கள் விரைவில் தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

## “தனி பலம்”

யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆணைகிடைக்கவில்லை. 25 வீத வாக்குகளை மாத்திரம் யாழ்ப்பாணத்திலே பெற்று விட்டு தங்களிற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது என அவர்கள் தெரிவித்தது தவறானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாங்கள் 2018 இல் போட்டியிட்டுப் பெற்ற வெற்றியை விடத் தனியாக இம்முறை நாங்கள் போட்டியிட்டுப் பெற்ற வெற்றி மேலானது.

ஒரு கட்சி தனியாகப் போட்டியிடுவதைத் தவிர்த்து ஒன்றாகவிருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு பின்னர்,நிர்வாகங்களை அமைப்பது சாத்தியமானது என நான் கடந்த காலங்களில் கூறிவந்திருக்கின்றேன். அந்த கணக்கு தற்போது பலருக்குப் புரியும் என்றார்.

கூட்டமைப்பை உடைத்துவிட்டோம் என சொல்பவர்களுக்கும் இந்த தேர்தல் முடிவுகள் சரியான பாடத்தைப் படிப்பித்திருக்கும். இலங்கை தமிழரசு கட்சி பலவீனமடையவில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததை விட தற்போது தனியாகப் பலமாக வெளிவந்திருக்கின்றது என்றார்.

## “ஒன்றிணைந்து செயல்படுவோம்”



மக்களின் வாக்குகளுக்கு மதிப்பு அளித்து, அதிக அளவிலான உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் இன்று புதன்கிழமை (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்..

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகர சபையில் புதிய நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கும். புதிய மேயர் எமது கட்சியைச் சேர்ந்தவரே நியமிக்கப்படுவார். ஆளும் தரப்பு பெரும்பான்மையைப் பெறாத, பிற உள்ளூராட்சி சபைகளில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஏனைய கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

அரசாங்கம் அமைக்கப்பட்டுக் குறுகிய காலத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக அரசாங்கம் தொடர்பான தங்கள் கருத்தை மக்கள் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் வெற்றி பெற்ற கட்சி உள்ளூராட்சி நிறுவனங்களையும் வென்றுள்ளன. ஆனால், வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் வாக்கு விகிதம் குறைந்துள்ளன.

.எதிர்காலத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிறுவும்போது எதிர்க்கட்சியின் ஒற்றுமையை அரசாங்கத்திற்கு நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

வென்ற அதிக எண்ணிக்கையிலான உள்ளூராட்சி மன்றங்களில் அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை இல்லை.

**“ நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர் கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்**

மக்களின் வாக்குகளுக்கு மதிப்பு அளித்து, அதிக அளவிலான உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல கட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தல் விதிகள் மீறப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமர் கூட தேர்தல் சட்டங்களை மீறுமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.

அரசாங்கம் மீண்டும் பயங்கரவாதத்தின் மூலம் நாட்டை ஆட்சி செய்யுமா என்ற சந்தேகம் எழுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பயமுறுத்தியவர் கைது

அடையாளம் தெரியாத ஒருவர் காரில் சட்டவிரோதமாக நுழைந்து, 8 வயது சிறுமியைத் தள்ளிவிட்டு, அவருடைய தாயையும் மிரட்டியதாக கடந்த 03ஆம் திகதியன்று கிடைத்த புகாரின் பேரில் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் விசாரணைகள் தொடங்கப்பட்டன.

கறுவாத்தோட்ட பொலிஸ் பிரிவின் மல்பாரா பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர், புதன்கிழமை( 07) அன்று, கறுவாத்தோட்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் கொலன்னாவ பகுதியில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொலன்னாவை, வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

விசாரணையில், பாடசாலை முடிந்து மகளை வீட்டிற்கு அழைத்துச் செல்ல காரில் வந்த சிறுமியின் தாய், மகளை பின் இருக்கையில் அமர வைத்துவிட்டு, காரின் முன்னால் சென்று ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்துள்ளார்.

அதன்போது பின் இருக்கையில் இருந்த அடையாளம் தெரியாத ஒருவர் மகளைத் தள்ளிவிட்டு மிரட்டியுள்ளார். தாயையும் மிரட்டியுள்ளார்.

அந்த நேரத்தில், சிறுமியின் தாய் சிறுமியுடன் காரில் இருந்து இறங்கி உதவி கேட்டு அலறியது தெரியவந்தது.

சம்பவத்திற்குப் பிறகு சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார், மேலும் சந்தேக நபர் தனியார் வாடகை வாகனத்தைப் பயன்படுத்தி அங்கிருந்து வெளியேறியதாகத் தகவல் வெளியானதை அடுத்து, விரிவான விசாரணை நடத்தப்பட்டு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

## கொழும்பின் மேயர் யார்?

ஜாதிக ஜனபல வேகய 48 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 13 இடங்களைப் பெற்றுள்ளன.

இலங்கை பொதுஜன பெரமுன 5 இடங்களையும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நான்கு இடங்களையும் பெற்றன.

தேர்தல் விதிகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் மேயர் நியமிக்கப்படுவார். இதன் விளைவாக, எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டால், தேசிய மக்கள் சக்திக்கான வாய்ப்பை மறுக்க முடியும் என கூறப்படுகின்றது.

இதேவேளை, 50 வருடங்களின் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி, கொழும்பு மாநகர சபையை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “திசைக்காட்டி கைகோர்க்காது”

பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற நிறுவனங்களில் தேசிய மக்கள் கட்சி சபைகளை நிறுவும். மக்களால் நிராகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகள் சபைகளை அமைப்பது நெறிமுறைக்கு புறம்பானது என்றார்.

அத்துடன், பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற கட்சி சபைகளை நிறுவ வேண்டும் என்றார்.

## “ஒன்றிணைத்த பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்குவோம்”

அண்மையில் நடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இரு பெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற இந்த அரசாங்கம், 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற செய்தியை நாட்டு மக்கள் இத்தேர்தலின் ஊடாக முன்வைத்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டது போலவே இந்த உள்ளூராட்சித் தேர்தலையும் ஜே.வி.பி. கையாண்டது. தேர்தலுக்காக மதத்தைக் கூடப் இவர்கள் பயன்படுத்தினர் என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர், புதன்கிழமை (07) கருத்துரைத்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்கள் இப்போது பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். உண்மையான மக்கள் சேவையை முன்னெடுப்பதற்கான தமது அங்கீகரித்தை வழங்கியுள்ளனர். பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பொய்களை முறியடித்து, உண்மையான பலம் வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற பொதுமக்களின் கருத்தின் அடிப்படையில் இந்த சவாலான பொறுப்பிற்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நபராக, நாங்கள் பொதுமக்களின் கருத்துக்குத் தலைவணங்கி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைப்போம். அதன் ஊடாக வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், கொள்கை ரீதியானதுமான சிறந்த மக்கள் சேவையைப் பெற்றுத் தருவோம். இதற்கான தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## “என் பேச்சை கேட்டிருந்தால் எதிரணிக்கு அமோக வெற்றி”

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்த ரணில் விக்ரமசிங்க, மேலும் தெரிவிக்கையில்,

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, நாங்கள் யானை சின்னத்தின் கீழ் போட்டியிட்டோம். இதை ஒரு தொடக்கமாகக் கருதலாம். சில பகுதிகளில் எங்கள் முடிவுகள் நன்றாக உள்ளன. நாம் திருப்தி அடையலாம். இப்போது புதிய ஐக்கிய தேசியக் கட்சி வேலை செய்ய வேண்டும். இப்போது எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி மக்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்..

நான் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் பங்கேற்கவில்லை. இது இளம் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது ஒரு சோதனை. நல்ல விஷயங்களும் உள்ளன, தோல்விகளும் உள்ளன. தற்போது நம்மிடம் உள்ள பலத்தைக் கொண்டு எப்படி முன்னேறுவது என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றார்.

யானை வேட்பாளர் பரிந்துரைக்கப்படும்போது மக்கள் வாக்களிக்க வருவார்கள் என்று சிலர் கூறினர். யானை வேட்பாளர் நியமிக்கப்பட்டதால் மட்டும் மக்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்று இப்போது தெரிகிறது. இப்போது நாம் கட்சிக்கு புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்த வேண்டும். இந்தக் கட்சியை ஐம்பதுகள் மற்றும் நாற்பதுகளில் உள்ளவர்கள் கட்டமைக்க வேண்டும். இதற்குப் பிறகு, இளைய தலைமுறையினர் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு முன்னேற வேண்டும் என்றார்.

## பிரசன்னவுக்கு விளக்கமறியல்

கோரிய குற்றப் புலனாய்வுத் துறையின் கோரிக்கையை பரிசீலித்த நீதவான், சிறையில் வாக்குமூலம் பதிவு செய்ய அனுமதி வழங்கினார்.

பிரசன்ன ரணவீர சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரரின் பாதுகாப்பு தொடர்பாக விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான், சந்தேக நபருக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

அரசாங்க காணி மோசடி தொடர்பாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் பலர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# NPPயிடம் வடக்கு கட்சிகள் கோரிக்கை




வடக்கில் உள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்திலும் எந்த அரசியல் கட்சிகளும் முழுமையான பெரும்பான்மையைப் பெறாததால், வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் வடக்கில் கவுன்சில்களை நிறுவ தேசிய மக்கள் சக்தியிடம் (NPP) கோரிக்கை விடுத்துள்ளன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க புதன்கிழமை (07) தெரிவித்தார்.

வடக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் (NPP )இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதாகவும், சில கட்சிகள் வடக்கில் கவுன்சில்களை அமைக்க தங்கள் ஆதரவை வழங்கியுள்ளன என்றும் அவர் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

வடக்கில்( NPP) 150 இடங்களைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

“பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சிகள் கூட அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக( NPP)க்குத் தெரிவித்துள்ளன. கட்சியின் கொள்கையின்படி நாங்கள் அதைப் பற்றி முடிவு செய்வோம்” என்று அவர் கூறினார்.

## பாடசாலை நுழைவாயில் மோதிய லொறி

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் காத்தான்குடி மீரா பாலிகா பாடசாலை பிரதான நுழைவாயில் சேதமடைந்துள்ளதுடன் மின் தூண்களும் சேதமடைந்துள்ளது.

மன்னாரில் இருந்து வந்த தாழங்குடாவைச் சேர்ந்த மீன்லொறி புதன்கிழமை (07) காலை வேகக்கட்டுப்பாட்டை இழந்து காத்தான்குடி மீரா பாலிகா பாடசாலை பிரதான நுழைவாயிலில் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த வாகனத்தின் முன் பகுதி சேதமடைந்துள்ளது. எனினும், வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித ஆபத்துக்களும் ஏற்பட வில்லை என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வர்த்தக நிலையம் தீப்பற்றி நாசம்

எம்.எஸ்.எம்.நூர்தீன், ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி கடற்கரை வீதியில் பாதணி விற்பனை நிலையம் ஒன்றில் புதன்கிழமை(07) அதிகாலை ஏற்பட்ட தீ பரவலினால் குறித்த விற்பனை நிலையம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

முஹமட் லாபீர் என்பவருக்குச் சொந்தமான இந்த பாதணி விற்பனை நிலையம் தீப் பற்றி எரிவதைக் கண்ட பொது மக்கள் ஏனைய வர்த்தக நிலையங்களுக்கு இந்த தீ பரவல் தொடராமல் தீயை அணைத்துள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி நகர சபை தீயணைப்பு பிரிவினர் இணைந்து தீயை அனைத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோதும் பாதணி விற்பனை நிலையம் முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளது

இதனால் ஒரு கோடியை 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாதணிகள் உபகரணங்கள் முற்றாக எரிந்து செய்தமடைந்துள்ளதாக குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.



தீப் பரவலுக்கான காரணங்கள் குறித்து விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலஞ்சம் பெற்ற உப பொலிஸ் பரிசோதகர் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரை மிரட்டி, 30 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக வாங்கிய தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த உப பொலிஸ் பரிசோதகர் தலைமறைவாகிய நிலையில் கடமையில் இருந்து இடை நிறுத்தப்பட்டு புதன்கிழமை (07) கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த உப பொலிஸ் பரிசோதகர் கடந்த முதலாம் திகதி நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சிவில் உடையில் சென்று அதன் உரிமையாளருக்கு, உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு உள்ளதாகவும் அதனால் கொழும்பிலிருந்து தன்னை சென்று சோதனையிடுமாறு தெரிவித்ததாகவும் கூறி அறைகளில் வாடகைக்கு இருந்தவர்களைச் சோதனையிட்டு அவர்களை மிரட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தனக்கு 50 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் தருமாறு கோரியுள்ளதுடன், தன்னிடம் இப்போது அந்த தொகை பணம் இல்லை எனவே 30 ஆயிரம் ரூபாதான் தற்போது உள்ளது என உரிமையாளர் தெரிவித்த நிலையில் அதனை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக குறித்த ஹோட்டலில் பொருத்தியிருந்த சிசிடிவி கெமராவில் பதிவாகிய வீடியோ மற்றும் குரல் பதிவுகளுடன் ஹோட்டல் உரிமையாளர் மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபரிடம் சென்று முறைப்பாடு செய்ததையடுத்து குறித்த பொலிஸ் உப பரிசோதகர் இதனையறிந்து உடனடியாக வாங்கிய 30 ஆயிரம் ரூபா பணத்தை அவருடன் கடமையாற்றி வரும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் கொடுத்து அனுப்பி ஹோட்டல் உரிமையாளரிடம் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து, மீண்டும் உதவி பொலிஸ் மா அதிபரிடம் ஹோட்டல் உரிமையாளர் பணத்தைத் திருப்பி தந்த விவகாரத்தைத் தெரிவித்ததையடுத்து இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணை மேற்கொண்ட நிலையில் அவர் கடமைக்கு வராது தலைமறைவாகியுள்ளார்.

இந்த நிலையில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் குறித்த உப பொலிஸ் பரிசோதகரை பணியில் இருந்து கடந்த திங்கட்கிழமை (5) இருந்து இடை நிறுத்தியுள்ளதுடன் புதன்கிழமை (07) நகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்த அவரை சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மீட்டியாகொட இரட்டைக் கொலை; மற்றுமொரு சந்தேக நபர் கைது

காலி - மீட்டியாகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்பஹிட்டிய பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் சனிக்கிழமை (03) அன்று இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக செவ்வாய்க்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்டியாகொட, வேரகொட பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்டியாகொட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே வேரகொட பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கைது செய்யப்பட்டவர் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## இந்தியாவிற்கு பறக்கும் ரணில்



இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் தி இந்து செய்தித்தாள் ஏற்பாடு செய்துள்ள விழாவில் கலந்து கொள்வதற்காக இன்று வியாழக்கிழமை(08) முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா செல்லவுள்ளார்.

இந்த விழாவில் ரணில் விக்ரமசிங்கே முக்கிய உரையாற்றுவார் என்று அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பல அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் கலைஞர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 6 அடி முதலை மடக்கி பிடிப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகர் பிரதேசத்துக்கு உட்பட்ட சின்ன ஊறணி பிரதேச குடிமனைக்குள் உட் புகுந்த 6 அடி கொண்ட முதலை ஒன்றை புதன்கிழமை (7) அதிகாலையில் பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்து வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பில் தொடர்ச்சியாகக் குடிமனை பகுதிகளில் முதலைகள் உட்புகுந்து வருவது அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாணவன் மீது தாக்குதல்; ஏழு பேர் பிணையில் விடுதலை



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக, தொழில்நுட்ப பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவனைக் கொடூரமாகத் தாக்கியதற்காகக் கைது செய்யப்பட்ட குறித்த பல்கலைக்கழகத்தின் ஏழு மாணவர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தியபோது, தலா மூன்று இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்க ஹோமாகம நீதவான் ராஜீந்திரா ஜெயசூரிய புதன்கிழமை (07) உத்தரவிட்டுள்ளார்.

ஹோமாகம தலைமையக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை எதிர்த்ததாலும், மாலை 6 மணிக்குப் பிறகு பல்கலைக்கழகத்தில் சுற்றித் திரிந்ததாலும், மாற்றுப் பெயர் பயன்படுத்தாததாலும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவன் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, வைத்தியசாலையிலிருந்து வெளியேறி, மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வேட்பாளரின் ஜீப் மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு

மதுகம, பாலிகா வீதியில் உள்ள வீடொன்றில் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரின் ஜீப் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக மதுகம பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஜீப் பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெப்ரவரி 15 , 2022 அன்று இந்த வீட்டில் சந்திமா தில்ஹானி பெரேரா என்ற பெண் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, மதுகம பொலிஸாரால் நீதிமன்றத்தில் அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர், 24 மணி நேரமும் குறித்த வீட்டிற்குத் துப்பாக்கிகளுடன் பாதுகாப்பு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, செவ்வாய்க்கிழமை (06) இரவு பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணியிலிருந்தபோது, மதுகம முதலி சுற்று வட்டத்தில் இருந்து வந்த ஒரு கருப்பு ஜீப் வண்டி இந்த வீட்டின் அருகில் பயணிக்கும் போது வேகத்தைக் குறைத்த நிலையில் பொலிஸ் சார்ஜன்ட்க்கு துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாகவும் இதன்போது தன்னையும் சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்ள தன்னிடம் இருந்த T56 துப்பாக்கியால் ஜீப்பை நோக்கி துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஜீப் உரிமையாளர் மதுகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## 3,000 நாட்களை எட்டியது உணவு தவிர்ப்பு ஆர்ப்பாட்டம்

க.அகரன்

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் 3000 நாட்களை, புதன்கிழமையுடன் (07) எட்டியுள்ள நிலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப்போரின் போதும், அதற்கு முன்னரும் காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு ஆர்ப்பாட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், போராட்டம் ஆரம்பித்து மூவாயிரம் நாட்களைக் கடக்கும் நிலையில் அவர்களது ஆர்ப்பாட்டம் தீர்வின்றி தொடர்ந்து செல்கின்றன.

இதனையடுத்து, புதன்கிழமை (07) அவர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐரோப்பிய அமெரிக்கக் கொடிகளை ஏந்தி இருந்ததுடன், சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர்.














# ஏழு மாதங்களுக்குள் செல்வாக்கை இழந்த அரசாங்கம்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று, மே 7ஆம் திகதியுடன் ஏழு மாதங்கள் நிறைவடைந்தன. பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று, ஆறு மாதங்கள், நிறைவடைந்துள்ளன. இந்த குறுகிய காலப்பகுதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செல்வாக்கை இழந்துள்ளது என்பது, 2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பெறுபேறுகளிலிருந்து தெள்ளத் தெளிவாகிறது.

341 உள்ளூராட்சி மன்றங்களில், 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பு, செவ்வாய்க்கிழமை (06), சுமுகமான முறையில் நிறைவுபெற்று, பெறுபேறுகளும் வெளிவந்தன. அந்த பெறுபேறுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தி, பல இடங்களில் வெற்றியீட்டிடுள்ளது. எனினும், சில மன்றங்களில் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சில உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால், தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சியமைக்கவே முடியாது. கொழும்பு மாநகர சபையைப் பொறுத்தவரையில், தேசிய மக்கள் சக்தியை விடவும், ஆகக் கூடுதலான ஆசனங்களை எதிர்க்கட்சிகள் பெற்றுள்ளன. பல மன்றங்களிலும் இதே நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்துள்ள ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச்சேரப் போவதில்லை என அறிவித்துள்ளார். அப்படியாயின், எதிர்க்கட்சிகள் இணைந்தே பல உள்ளூராட்சி மன்றங்களை ஆட்சியமைக்கவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த குறுக்கிய காலத்தில், அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையே உள்ளூராட்சிமன்ற பெறுபேறுகள் எடுத்தியம்புகின்றன. வாய்ப்பேச்சில் வீரம் காட்டிய அரசாங்கம், செயற்பாடுகளில் திறமையை வெளிப்படுத்தவில்லை. என்பதே அர்த்தமாகும்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், தேசிய மக்கள் சக்தி பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. வடக்கில், தமிழ் கட்சிகளுக்கு மக்கள் வாக்களித்து அமோக வெற்றிபெறச் செய்துள்ளனர். கிழக்கில், தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளும், முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஜனநாயகம் கட்டிக்காக்க வேண்டுமாயின், தேர்தல்கள் நடத்தப்படவேண்டும். கடந்த அரசாங்கங்கள், பல தேர்தல்களை ஒத்திவைத்தே, ஆட்சியை நீடித்துச்சென்றன. எனினும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தேர்தலை நடத்தித் தங்களுடைய இருப்பை சுரண்டி பார்த்துள்ளது.

ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களின் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை, அரசாங்கம் நிறைவேற்றவே இல்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாகவே முன்வைக்கப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றில் போட்டியிட்ட பல வேட்பாளர்கள், ஊழல், மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன.

மக்களுடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்தக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது, அந்தந்த பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே தெரியும். ஆகையால், வேட்பாளர்களை நிறுத்தும்போதும் அதிகூடிய கவனத்தை செலுத்தியிருக்கவேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நம்மவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுக்குச் சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறி விடுகின்றன.

சிலர், தமது தாய் மொழியைக் கொச்சையாகப் பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகிறார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய்மொழி என எண்ணிக் கொள்கிறார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேச முடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்றுப் பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒரு போதும் மறவாதீர்கள்.

பருத்தியூர் பால.வயிரவநாதன்

# வடக்கில் தேசிய மக்கள் சக்தி படுதோல்வி

முருகானந்தம் தவம்

நாடு பூராகவும் 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 275 பிரதேச சபைகள் அடங்கலாக 339 உள்ளூராட்சி சபைகளுக்கு 8,287 ஆசனங்களுக்காக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக செவ்வாய்க்கிழமை நடந்து முடிந்த தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசு பெரும் பின்னடைவை சந்தித்துள்ள நிலையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு விட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட வடக்கு மக்கள், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமது தவறைத் திருத்திக் கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்,ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாகியவற்றுக்குப் பேராதரவை வழங்கி தமிழ்த் தேசியத்தைப் பாதுகாத்துள்ளதுடன், தமிழர் வாக்குகளைப் பெற்றுக் கொண்டே அவர்களை அழிக்கும், ஆக்கிரமிக்கும், அடையாளங்களை இல்லாதொழிக்கும், ஏமாற்றும் வேளைகளில் ஈடுபட்ட தேசிய மக்கள் சக்திக்கும் பாடம் புகட்டியுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 3 ஆசனங்கள் வன்னி மாவட்டத்தில் 2 ஆசனங்கள் என யாருமே எதிர்பாராத வகையில், 5 ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட தேசிய மக்கள் சக்தி வடக்கு அம்மக்கள் தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு தம்முடன் இணைந்து விட்டதாகக் கூறிக்கொண்டு நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும் வடக்கை வளைத்துப்போட ஜனாதிபதி, பிரதமர் அமைச்சர்கள் பட்டாளம் என வடக்கிற்குப் படையெடுத்தபோதும் அவர்களின் திட்டம் தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது.

வடக்கில் தேசிய மக்கள் சக்தி அடைந்த படு தோல்விக்கு யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவர்களின் 3 எம்.பிக்கள். அவர்களை வழிநடத்தும் அமைச்சர் ஆகியோரும் அண்மையில் அரசினால் வெளியிடப்பட்ட வடக்கில் 6000 ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவிப்பும் பெரும் பங்கு வகித்துள்ளன. அத்துடன், தேசிய மக்கள் சக்தியின் 'மாற்றம்' என்ற கோஷத்தை நம்பி வாக்களித்த தமிழ் இளையோர், அதன்பின்னர் தேசிய மக்கள் சக்தியினால் மெல்ல மெல்ல வெளிப்படுத்தப்பட்ட இன வாதத்தைப் புரிந்து கொண்டமையும் அரசின் இந்த படுதோல்விக்கு முக்கிய காரணம்.

தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களினால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் அவர்கள் அடைந்த படுதோல்விக்கான காரணங்களை மட்டும் இந்த பத்தியில் பார்ப்போம். நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசாரங்களின் போது, "அன்பான வாக்காளரே… மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும். இனிமேலாவது பொறுப்புடன் வாக்களிப்போம். யாழ்ப்பாண கல்விச் சமூகம்" என்று யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் பலரின் கவனத்தை ஈர்த்திருந்ததுடன், யாழ். மாவட்ட வாக்காளர்கள் பாராளுமன்றத் தேர்தலில் செய்த வரலாற்று தவறையும் அதன் விளைவால் யாழ். சமூகம் எதிர்கொள்ளும் அவமானங்கள்,அசிங்கங்கள்,கேலி ,கிண்டல்களின் வேதனைகளை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

இந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் யாரெனத் தெரியாதவர்களல்ல. இது ஒரு தேர்தல் கால சுவரொட்டிகளாக இருந்ததால் இதன் பின்னணியில் இருப்பது அரசியலா அல்லது உண்மையில் யாழ். மக்களின் ஆதங்கமா என்பது ஒருபுறமிருக்க மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை இவ்வாறு விமர்சிப்பது தவறானதாக இருந்தாலும், மேற்குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகள் தமிழ் மக்களைக் குறிப்பாக கற்றோர் சமூகம் என இன, மத வேறுபாடின்றி போற்றப்படும் யாழ். மக்களைத் தலைகுனியவும் வேதனைப்படவும் வெட்கப்படவும் வைத்ததன் விளைவே இந்த சுவரொட்டிகள் என்றே கருதப்படுகின்றது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்திலிருந்து 6 எம்.பிக்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் கருணநாதன் இளங்குமரன் (32,102 வாக்குகள். இவர் தேர்தல் அரசியலுக்கு வர முன்னர் மக்கள் விடுதலை முன்னணியிலும் அதன் தொழிற்சங்க இயக்கத்திலும் பங்கெடுத்து வந்துள்ளார்) டொக்டர் சிறீபவானந்தராஜா சண்முகநாதன் (20,430 வாக்குகள்), ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி (17,579வாக்குகள். களனிப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற இவர், பாடசாலை ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றியுள்ளார்) ஆகியோர் தேசிய மக்கள் சக்தியிலிருந்தும் டொக்டர் அர்ச்சுனா ராமநாதன் (20,487 வாக்குகள்) சுயேச்சை குழு 17இல் ஊசி சின்னத்திலும் சிவஞானம் சிறீதரன் (32,833 வாக்குகள்) தமிழரசு கட்சியிலிருந்தும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (15,135 வாக்குகள்) அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்தும் தெரிவானார்கள்.

இவர்களில் யார் மூவர் கோமாளிகள் என்பதும் யார் பைத்தியம் என்பதும் நாம் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. அந்த நால்வருமே தமது கோமாளித்தனமான, பைத்தியக்காரத்தனமான பாராளுமன்ற பேச்சுக்கள், ஒருங்கிணைப்புக்குழுக்கூட்ட அடாவடிகள், அசிங்கங்கள் தொலைக்காட்சி விவாதங்கள், ஊடகங்களுக்கான கருத்துக்கள். அள்ளிவிடும் பொய்கள், வெளிவிடும் தவறான புள்ளி விபரங்கள், சேறு பூசல்கள், சண்டித்தனங்கள் என தங்களில் யார் கோமாளிகள், யார் பைத்தியம் என்பதனை தாமாகவே வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் பொது வெளிகளில், ஊடக கருத்துக் கூறல்களில் இலங்கையின் சனத் தொகை இரண்டரை இலட்சம் பேர் (இலங்கையின் மொத்த மக்கள் தொகை 21,763,170 ), விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது (2001ஆம் ஆண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது) ஏழாலைக்குள்தான் யாழ்ப்பாணம் உள்ளது, வடக்கில் காணிகள் அரசுடைமையாக்குவது தொடர்பான வர்த்தமானி வெளிவந்துள்ளது என்பது பொய் (அரசினால் அந்த வர்த்தமானி வெளியிடப்பட்டு, அது ஊடகங்களில் வெளிவந்த பின்னர்) என்ற கோமாளித்தனமான கருத்துக்களை வெளியிட்டு தனக்கு கணக்குதான் தெரியாது என்றால், புவியியலும் தெரியாது, பொது அறிவும் கிடையாது என்பதனை நிரூபித்து வருகின்றார். அதுமட்டுமன்றி, பொது இடங்களில், படித்தவர்கள் அதிகமுள்ள கூட்டங்களில் கூட இவர் சிறுபிள்ளைத்தனமாகக் கூறும் கருத்துக்கள், சக எம்.பிக்களுடன் வாதிடும் போது, கூறும் கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்கள் ஆக்ரோஷமாக வாதிடுகின்றேன் என தலைமைக்குக் காட்டுவதற்காக இவர் வாய்க்கு வந்தபடி பேசும் பேச்சுக்கள் இவரை ஒரு கோமாளியாகவே அடையாளப்படுத்துகின்றன.

இவரின் இவ்வாறான கோமாளித்தனமான செயற்பாடுகளினால் அவரின் கட்சியினை சேர்ந்த ஏனைய அரசியலும் தெரியாத, பேச்சாற்றல்களும், செயற்பாடுகளும் இல்லாத அப்பாவி மக்கள் பிரதிநிதிகளும் கிண்டல்களுக்கும் விமர்சனங்களுக்கும் வசைபாடல்களுக்குள்ளாகியுள்ளனர். அதன் விளைவாகவே மூன்று கோமாளிகள் என்ற பட்டத்தை இவர்கள் பெற்றுள்ளனர். இவர்கள் பொது வெளிகளில்தான் இவ்வாறு என்றால் பாராளுமன்றத்தில் கூட 'பேசா மடந்தை' களாகவே இருக்கின்றனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஒவ்வொரு எம்.பிக்களின் செயற்பாடுகள் பட்டியலில் இவர்களில் ஒருவர் 134ஆவது இடத்தையும் அடுத்தவர் 207ஆவது இடத்தையும் இன்னுமொருவர் 210ஆவது இடத்தையும் பெற்றுள்ளதன் மூலம் இவர்கள் பாராளுமன்றத்தில் பிரயோசனம் அற்றவர்கள் என்பதனை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

சரி இவர்கள்தான் கோமாளிகள் போல் செயற்படுகின்றார்கள் என்றால், இவர்களைக் கட்டுப்படுத்தும், வழிநடத்தும் பொறுப்பில் யாழில் உள்ளவரோ 'நானும் ரவுடி' தான் என்கின்றார். இந்நாட்டின் முன்னாள் போராளிகளின் கனவை தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளால் நிறைவேற்ற முடியாது. போராளிகளின் அர்ப்பணிப்புக்கு அவர்களால் அருகில்கூட வரமுடியாது. ஆனால், போராளிகள் கண்ட கனவை (தமிழீழம்-தனிநாடு) நனவாக்குவதற்குரிய வேலையை நாம் செய்கின்றோம். இயக்கங்கள் மீது உண்மையான பற்றுள்ளவர்கள் நாம் என்று பிதற்றுகின்றார். வெற்றியை (இறங்குதுறை) 'ஜட்டி' என்கின்றார். பாராளுமன்றத்தில் யாழ் எம்.பியை 'நாய்' என்கின்றார், கரடி என்கின்றார். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைத் தனது உதவியாளரைக் கொண்டு தாக்குகின்றார். சண்டித்தன அரசியல் செய்கின்றார்.

தமக்குள் முட்டிமோதும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் பாடம் படிப்பிக்கின்றோம் என்றவகையில், கற்றறிந்த சமூகமான யாழ். சமூகத்தினால் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளினதும் 'மாற்றம்' என்ற கோஷத்தினுள் மூழ்கிப்போன, தமிழர் போராட்ட வரலாற்றையும் சிங்களக் கட்சிகளினதும் சிங்களத் தலைவர்களினதும் தமிழருக்கு எதிரான இனவாதங்களையும் தமிழின அழிப்புக்கள், ஆக்கிரமிப்புக்களையும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாத யாழ். இளைஞர், யுவதிகளின் தவறான தெரிவுகளினாலுமே "அன்பான வாக்காளரே …மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும் . இனிமேலாவது பொறுப்புடன் வாக்களிப்போம் -யாழ்ப்பாண கல்விச் சமூகம்" என்ற சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்துச் சுவர்களை ஆக்கிரமிக்கக் காரணம்.

இவ்வாறான நிலையில்தான் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற தமிழர் விரோத, இனவாத கட்சியின் பினாமியான தேசிய மக்கள் சக்தியின் உண்மை முகத்தை அறியாது மாற்றத்தை நம்பி பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சிக்கு வாக்களித்த தமிழ் இளையோர் கடந்த சில மாத ஆட்சியிலேயே ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியின் இனவாத முகத்தையும் அவர்களின் யாழ். மாவட்ட பிரதிநிதிகளின் கோமாளித்தனங்களையும் அறிந்து கொண்டதன் பிரதிபலிப்பே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கில் தேசிய மக்கள் சக்தி அடைந்த படுதோல்வி.

## கடிதங்கள்

### நடைபாதையை பயன்படுத்தும் ஓட்டுனர்கள்

ஹட்டன் நகர வீதியில் பாதசாரிகள், பயன்படுத்தும் நடைபாதையில் சில நபர்கள் மோட்டார் சைக்கிள்களில் பயணிக்க முயற்சிப்பதால், பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சட்டத்தை மீறி இவ்வாறு நடைபாதைகளில் வாகனம் ஓட்ட நடவடிக்கை எடுப்பதால், விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி, நடைபாதையைப் பயன்படுத்தும் ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், இவ்வாறு செயற்படுவதைத் தவிர்க்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எச்.எம்.சுதத் ஹேவா



# சமூகக் கட்டமைப்பும் கட்டுடைப்பும்

## சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் காட்சி

ஸ்ரீ கிருபாகரன் டிசானி, பஞ்சலிங்கம் லஜீபன்
நுண்கலைத்துறை,
கலைவரலாறு சிறப்புக் கலை,
விடுகை வருட மாணவர்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர் அமைப்பாகிய கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நுண்கலைத்துறையின் விடுகை வருட மாணவர்களாகிய ஸ்ரீ கிருபாகரன் டிசானி, பஞ்சலிங்கம் லஜீபன் ஆகிய இருவரது எடுத்தாளுகையில் 'சமூகக் கட்டமைப்பும் கட்டுடைப்பும்: சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் காட்சி' எனும் தலைப்பின் கீழ், கேலிச்சித்திரப் படைப்பாளியான சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) என்பவரின் படைப்புகளின் காட்சிப்படுத்தலானது ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளது.

காட்சியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் மே மாதம் 08ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு ஆரம்பித்து 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதற்கிடையில் வரும் பொது விடுமுறை தினங்களான 12ஆம் 13ஆம் திகதிகளில் காட்சிக்கூடம் மூடப்பட்டும் ஏனைய நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையாளர்களுக்காகத் திறந்திருக்கும்.

இக்காட்சியில் சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்கள் எனும் இக்காட்சியில் அவரால் வரையப்பட்ட கேலிச் சித்திரங்களின் சேகரிப்புகள், அவரது வெளியீடுகள் என்பனவற்றின் அசல், பிரதிகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. கருத்தோவியம் அல்லது கேலிச்சித்திரம் என்பது நகைச்சுவையைத் தூண்டும் வண்ணம் வரையப்படுவதாகும். வசனங்களால் எழுதி உணர்த்த முடியாத கருத்துக்களைக் கருத்துப் படங்கள் எளிதாக உணர்த்துகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரத் துறைகளிலுள்ள குறைகளை நகைச்சுவையுடன் உணர்த்தும்படி கேலிச்சித்திரங்கள் அமைகின்றன. கேலிச்சித்திரம் என்பது ஒரு பாத்திரம், அதன் முக்கிய பண்புகள் மிகைப்படுத்தப்பட்டவையாக இருக்கும்.

இந்த அதீத மிகைப்படுத்தல் அந்த




பாத்திரத்தை வாசகருக்கு கேலிக்குரியதாக தோற்றுகின்றது. கேலிச்சித்திரங்கள் 16ஆம் மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் பிரபலமடைந்தன. அவை ஐரோப்பிய அரசியல்வாதிகளை கேலி செய்யும் ஒரு வழிமுறையாக பயன்படுத்தப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் காலனியவாதிகளால் இலங்கையில் அறிமுகப்படுத்தபட்டது. இலங்கைக் கேலிச்சித்திர படைப்பாக்கத்துறையின் முன்னோடிக் கலைஞர்களுள் ஒப்ரி கொலற், ஜிஃப்ரி யூனுஸ், டபிள்யூ. ஆர். விஜேசோம். கமிலஸ் பெரேரா. சி.சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலராவர்.

சிரித்திரன் சுந்தர் என அறியப்படும் சிவஞானசுந்தரம் 03.03.1924இல் யாழ்ப்பாணத்தில் கரவெட்டியில் பிறந்தார். ஓவியர் எஸ்.ஆர்.கனகசபையின் உந்தலில் ஓவியம் வரையத் தொடங்கிய இவர் கட்டடக்கலையை பயிலச் சென்று பின் மும்பையிலுள்ள ஜே ஜே கலைப் பள்ளியில் சித்திரக்கலைக்கான பயிற்சியை பெற்றுக்கொண்டார். அதேசமயம், ராஜா ரவிவர்மாவிடமும் ஓவியக்கலை பயின்றார்.

இவர் கொஞ்ச், பிளிட்ஸ் ஆகிய ஆங்கிலப் பத்திரிகையிலும் லோக்கசத்த என்ற மராட்டிய பத்திரிகையிலும் தினகரன், வீரகேசரி, மித்திரன், சிரித்திரன் போன்ற தமிழ் சஞ்சிகைகளில் கேலிச்சித்திரக் கலைஞராக செயற்பட்டார். அவரது கருத்தோவியங்களின் நூலாக 'சிரித்திரன் சித்திரக் கொத்து' எனும் தலைப்பில் வெளியாகி உள்ளது. மேலும் காலம், சுவைத்திரல் போன்ற சஞ்சிகைகள்



இவர் குறித்த சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளன.

1963இல் சிரித்திரன் சஞ்சிகையை தனது சொந்த இதழாக வெளியிட்டார். 1971ஆம் ஆண்டு நாட்டில் தோன்றிய கலவரங்கள் காரணமாக சிரித்திரன் இதழ் கொழும்பில் வெளியிடலை நிறுத்தி பின் யாழ்ப்பாணத்தில் வெளியானது. 1987ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படையினருடன் நிகழ்ந்த போரின் போது இடம்பெற்ற சம்பவங்களில் சிரித்திரன் அச்சகத்தின் சொத்துகள், அச்சகப் பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. இதனால் 1987-1990களின் மார்ச் வரையிலான காலப்பகுதியில் சிரித்திரன் இதழ் வெளியிடப்படவில்லை. அத்துடன், அவரைப் பாரிசவாத நோய் பற்றிக் கொண்டது. வலது கரம் இயங்க மறுத்தநிலையில் இடது கரத்தால் எழுதி மீண்டும் சிரித்திரன் இதழை வெளியிட்டு வந்தார். 1995 மூன்றாம் ஈழப்போரின் போது, இடம்பெற்ற வலிகாம இடப்பெயர்வின் போது மீண்டும் கடுமையான நோய்க்கு ஆளானார். 03.03.1996ஆம் ஆண்டு அவர் வடமராட்சியில் காலமானார்.

சுந்தரின் கேலிச்சித்திரங்கள் பொதுவாக சமூக கட்டமைப்பை விமர்சிக்கும் சிறப்புக்குரியவை. 18ஆம் நூற்றாண்டின் ஆங்கிலேய ஓவியரான வில்லியம் ஹோகார்ட் (William Hogarth) சமூக விமர்சிப்பின் நடுத்தர வர்க்க விழுமியத்தை கேள்விக்குள்ளாக்கல் மற்றும் ஐரோப்பிய பாணியில் இலங்கையின் முதல் ஓவியம் வரைந்த ஒல்லாந்தப் பறங்கிய இன வழி வந்த ஜான் லியோனார்ட் கலென்பார்க் வான் டார்ட் (John Leonard Kalenbery van Dort) என்போரது தகவமைப்பு சுந்தரின் கருத்தோவியங்களில் கையாளப்பட்டுள்ளது.

இடதுசாரிக் கொள்கை அரசியல் எதிர்ப்பார்ப்பு. கால்மார்க்ஸின் மார்க்சிய கொள்கை போன்ற சிந்தனைகள் தனது படைப்பின் பாத்திரங்களான சின்னக் குட்டி, மயில் வாகனத்தார், மைனர் மச்சான் மற்றும் சவாரித் தம்பி, மிஸீஸ் தாமோதரம் ஆகியவற்றில் பொருத்திச் சமூக கட்டமைப்பு மக்களிடையே புதைந்துள்ளமையை தனது பார்வையில் விமர்சித்துள்ளார். இதற்காக நகைச்சுவையை ஆ ஏந்தி மக்களிடையே புரிதலை ஏற்படுத்த புரட்சி செய்தவர்.

இவரது சமூகக் கட்டுமானமானது மக்களின் யதார்த்த வாழ்வின் பல சிக்கல்களை ஏற்படுத்தி உள்ளன. இவற்றை அவர் கட்டுடைக்கும் செயற்திட்டமாக வெறுமனே சிரிப்புக்குரியதாக மட்டுமின்றி, சிரிப்புடன் சிந்தனையை தூண்டுவதாக இவரது படைப்புக்களை அடையாளப்படுத்தலாம். சுந்தரின் படைப்புக்கள் சமூக கட்டுமான விமர்சிப்பினை சமூக, அரசியல், பொருளாதார வகைமாதிரியில் காண்பிய விமர்சனம் செய்வதுடன் நகைச்சுவையில் மக்களை விழிப்படையச் செய்யும் சமூக மேம்பாட்டுக்கான உன்னத வீச்சாகவும் திகழ்கின்றன.

சுமார் 45 ஆண்டுகளாக இலங்கையின் கேலிச் சித்திரத்துறையில் தனது ஆளுமையைச் செலுத்திய சுந்தரின் நினைவாக இலக்கிய விழா ஒரு முறை கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்டது. இருப்பினும், அவரது படைப்புக்களின் காட்சிப்படுத்தல்கள் குறிப்பிடும்படியாக நிகழாத சூழ்நிலையில், அவரது குறித்த படைப்புகள் பற்றிய கலை வரலாற்றுப்புல ஆய்வு முக்கியமானதாகும். வெறும் நகைப்புக்காக மட்டுமல்லாமல் சிந்தனையை தூண்டும் பல ஆக்கங்களை படைத்த பெருமைக்குரியவர். பல்வேறுப்பட்ட படைப்புக்களை தன் கைவண்ணத்தால் உருவாக்கி இருப்பினும், அவரது சமூகக் கட்டமைப்பின் கட்டுடைப்பு பார்வையிலான கேலிச் சித்திரங்களை மையப்படுத்தியதாகவே இக்காட்சி அமைகிறது. இக் காட்சிப்படுத்தலினை இலவசமாக யாவரும் பார்வையிடலாம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# "எழுத்துகளை நேசித்தவர்"

## ஊடகவியலாளர் மோகனதாஸின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்



க.விஜயரெத்தினம்

> இவரின் இலக்கியத்திறமை மற்றும் எழுத்துத் திறமைக்கு 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவித்தமை இவருடைய கலை இலக்கியத் திறமைக்கு வழங்கப்பட்ட கௌரவமாகும்

ஊடகத்துறையைத் தொழிலாகக் கொள்ளாமல் மக்களின் சேவையாகக் கொண்டு பேனா மூலம் எழுதி, ஊடகத்துறையில் உச்சம் தொட்டு மறைந்த ஊடகவியலாளர் மோகனதாஸின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்.

துறைநீலாவணையில் ஆசிரியராகவும், ஊடகவியலாளராகவும், இளம் கலைஞராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்து மக்களின் குறைகளையும்,தேவைகளையும் பேனா முனையில் அச்சொட்டாக எழுதி பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான பல தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தவரும், தமிழ்மக்களின் கலை,கலாசாரத்தை அடுத்த சந்ததிக்கு பேனா முனை மூலம் கோர்ப்புச் செய்து சாதித்து காட்டிய கலை ஆர்வலரும், இலக்கிய உலகில் வலம்வந்தவர் பாக்கியராஜா மோகனதாஸ்.

அவர், தனது 34ஆவது வயதில் கடந்த 2022.04.23 திகதியன்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மரணமடைந்து 2025.04.23 திகதியுடன் மூன்றாம் ஆண்டை கடந்துள்ளார். துறைநீலாவணையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அன்னாரின் ஓராண்டு நினைவுதின அந்தியேட்டிக்கிரியை வியாழக்கிழமை (08) இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு அன்னார் ஆற்றிய ஊடகத்துறை மற்றும் கலைத்துறை சார்பான திறமைகளையும், ஒருதடவை மீட்டுப்பார்ப்போம்.

இவர் துறைநீலாவணையில் 1988.03.30ஆம் திகதி பாக்கியராசா சிவராணி தம்பதியினருக்கு முதலாவது புதல்வராகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம்வரை துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் படித்தார். உயர்தரத்தில் சித்தியடைந்த இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவனத்தின் நுண் கலைத்துறை பாடத்திற்குப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றிருந்தார்.

அங்குத் தொடர்ச்சியாகப் படித்ததுடன், இவரின் முதல் திறமையினை உணர்ந்துகொண்ட விரிவுரையாளர்கள் இவரது எழுத்தாற்றல் திறமையினால் ஈர்த்துக்கொண்ட இவர் பத்திரிகைத்துறையில் கட்டுரைகளை எழுதுவதற்குப் பயிற்றுவித்தனர். பட்டத்தினை பூர்த்தி செய்து வெளியேறிய இவர் தொடர்ந்து பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதுவதில் நின்று விடாது படைப்பாளிகளின் வீடு தேடிச்சென்று அவர்களுடன் நேர்காணலை மேற்கொண்டு படைப்பாளிகளின் திறமையினை நாட்டிலே வெளிவரும் நாளிதழ்களில் வெளிக்கொண்டு வந்தார்.

இவரின் எழுத்தாற்றல் திறமையினை வித்தியாசமான முறையில் மேற்கொண்டிருந்தார். அதன்பின்னர் கல்வி அமைச்சினால் கோரப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கமு/சம்மாந்துறை மத்திய கல்லூரியில் ஆசிரியராக இணைத்துக் கொண்ட இவர், சுமார் 3 வருடங்களை ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் செய்தார். இவர் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பைத் தனதாக்கிக் கொண்டார்.

இவர் தினகரன், வீரகேசரி, தினக்குரல், தமிழன், தமிழ்மிரர், தமிழ் தந்தி போன்ற பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும் ஊடகவியலாளராக 9 ஆண்டுகள் பேனா முனையில் செய்திகளையும், கலை இலக்கிய கட்டுரைகளையும் எழுதிக்குவித்தார். அதுமட்டுமல்ல, வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகள், குறைபாடுகளை எழுதி அதற்குத் தீர்க்கமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து மக்களின் மனம் கவர்ந்த ஊடகவியலாளராக இவர் திகழ்ந்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட படைப்பாளிகளின் ஆக்கங்களையும், அரசியல்வாதிகளின் நேர்காணலையும் மேற்கொண்ட இவர், பத்திரிகைகளில் வெளிக்கொண்டு வந்தநிலையில், சுமார் 73 கலைஞர்களின் படைப்புக்களை மாத்திரமே தொகுத்து 'படைப்பாளிகளின் ஆளுமை' எனும் தலைப்பில் நூல் உருவாக்கம் ஒன்றினை செய்து திருகோணமலையில் 2021ஆம் ஆண்டு வெளியீட்டு வைத்தார்.

இவர் ஊடகத்துறையில் ஊடகத் தேனீயாக அங்கும் இங்கும் பறந்து தமது எழுத்தாற்றல் மூலம் பல படைப்புக்களையும், கலையம்சங்களையும் உலகையறியச் செய்தார். இவர் ஊடகத்துறையைத் தொழிலாகக் கொள்ளாமல் பணியாகப் போற்றி வாழ்ந்து காட்டியவர். எழுத்தையும், ஊடகத்தையும் உயிராகப் போற்றி வாழ்ந்தவர். இளம் கலைஞர், பண்பாளர், எல்லோரையும் அன்பாக நேசித்து அதிகமானவர்களின் மனதைக் கவர்ந்தவர். பெற்றோர் இல்லாமல் பொருளாதாரத்திற்கு கஷ்டமான பல உயர்தர ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கற்றல் கற்பித்தல் பணிகளை ஊட்டி பல மாணவர்களின் கண்ணீரைத் துடைத்து பல்கலைக்கழகம் அனுப்பி வைத்துள்ள பெருமையும் இவருக்குண்டு.

இவரின் இலக்கியத்திறமை மற்றும் எழுத்துத் திறமைக்கு 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவித்தமை இவருடைய கலை இலக்கியத் திறமைக்கு வழங்கப்பட்ட கௌரவமாகும்.

இவரின் இறப்பினால் மட்டக்களப்பு மண்ணானது ஒரு இளம் ஊடகவியலாளரை இழந்துள்ளது. அவரின் இறப்பு ஈடு செய்யமுடியாத இழப்போடு எழுத்துக்களையும், இலக்கியங்களையும் நேசிக்கும் வாசகர்களுக்கு பேரிழப்பாகும்.அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திப்போம்.

இந்தியா/பாகிஸ்தான்

ஆசிய விமான சேவையில்

# கடும் சிக்கல்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவும் யுத்தம் காரணமாக, ஐரோப்பாவுக்கு செல்லும் விமானங்களை மாற்றுப்பாதையில் ஆசிய விமான நிறுவனங்கள் மாற்றியத்துள்ளதுடன், சில விமான சேவைகளையும் இரத்து செய்துள்ளன.

அந்தவகையில், தாய்வானைச் சேர்ந்த EVA Air நிறுவனம், பயணிகள் மற்றும் பணியாளர்கள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தியா - பாகிஸ்தான் பகுதியில் உள்ள விமான வழித்தடத்தைத் தவிர்க்கும் வகையில், ஐரோப்பா நோக்கிய விமானங்களை மாற்றியமைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மேலும், வியன்னாவிலிருந்து புறப்பட்ட விமானம், மீண்டும் அந்நகரத்திற்கே திருப்பி அனுப்பப்பட்டதோடு,




தாய்வான் - மிலான் விமானம் வியன்னாவை அடைந்த பின் எரிபொருள் நிரப்பிய பின்னர் பயணத்தைத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

கொரியன்எயார் தனது (சியோல்) இஞ்சியோன்-டுபாய் விமானங்களை, பாகிஸ்தான் வான்வெளி வழிப் பாதைக்குப் பதிலாக மியன்மார், பங்களாதேஷ் மற்றும் இந்தியா வழியாகச் செல்லும் தெற்குப் பாதையைத் தெரிவு செய்தது.

புதன்கிழமை (7) அதிகாலை முதல், ஐரோப்பா மற்றும் தெற்காசியாவில் உள்ள இடங்களுக்கான விமானங்கள் மாற்றுப்பாதையில் இயக்கப்படும் என்றும் இதனால் சில விமானங்கள் தாமதமாகலாம் என்றும் தாய்வான் எயார்வேஸ் தெரிவித்துள்ளது.

சீனா எயார்லைன்ஸ், தனது அவசரகாலத் திட்டத்தைச் செயற்படுத்தியுள்ளதாகவும், அதன் பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் கூறியது.

மேலும், புதன்கிழமை (7) இலண்டனுக்குச் செல்லவிருந்த விமானமும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைன் மீது படையெடுப்பதற்கு முன்பு, தாய்வானில் இருந்து ஐரோப்பா நோக்கிச் செல்லும் பல விமானங்கள் ரஷ்யாவைத் தாண்டி பறந்தன. ஆனால், தற்போது இந்தியா,பாகிஸ்தான் மற்றும் மத்திய ஆசியா மீது விமானங்கள் பறந்ததால், இப்போது தாய்வான் விமான நிறுவனங்கள் விமானச் சேவைகளைத் தடை செய்துள்ளன.


பாகிஸ்தான்

## சமரசத்துக்கு அழைக்கும் பாகிஸ்தான்

இந்தியாவுடன் சமரசத்துக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

ப்ளூம்பெர்க் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப், "கடந்த இரண்டு வாரங்களாக நாங்கள் இந்தியாவுக்கு எதிராக எந்த விரோத நடவடிக்கையையும் தொடங்க மாட்டோம் என்று தொடர்ந்து கூறி வருகிறோம். இருப்பினும், நாங்கள் தாக்கப்பட்டால், நாங்கள் பதிலடி கொடுப்போம்.

இந்தியா பின்வாங்குவதை தேர்வுசெய்தால், இந்தப் பதற்றத்தைத் தணிக்க நாங்கள் முழுமையாகத் தயாராக உள்ளோம்" என்று தெரிவித்தார்.



அமெரிக்கா

## "வருபோது அறிந்தேன்"

வெள்ளை மாளிகை வாசல் அருகே நடந்து வரும்போதுதான் பாகிஸ்தான் மீது இந்தியா ஏவுகணை தாக்குதல் நடத்தியது குறித்து அறிந்தோம் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய ஏவுகணை தாக்குதல் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் வைத்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அந்த கேள்விக்குப் பதில் அளித்த போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "கடந்தகாலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஏதோ நடக்கப்போகிறது என்று எங்களுக்குத் தெரியும். இந்தியாவும், பாகிஸ்தானும் பல ஆண்டுகளாகச் சண்டையிட்டு வருகின்றன. இந்த மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என நம்புகிறேன்" என்றார்.



பாகிஸ்தான்

## "இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கப்படும்"

பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இந்தியாவுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் மிரட்டல் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவத்தின் ஊடக பிரிவு தலைவர் அகமது ஷெரீப் சவுதிரி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இது கோழைத்தனமான எதிரி இந்தியா வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. பஹ்வல்பூர், கோட்லி, முசாபராபாத் ஆகிய 3 நகரங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் பதிலடி கொடுக்கும். பதிலடிக்கான நேரம், இடத்தை பாகிஸ்தான் முடிவு செய்யும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இஸ்ரேல்

‘ஆபரேஷன் சிந்தூர்’க்கு

## இஸ்ரேல் ஆதரவு

இந்திய இராணுவத்தின் ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கைக்கு இஸ்ரேல் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரூவன் அசார் ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்தியாவின் தற்காப்பு நடவடிக்கையை இஸ்ரேல் ஆதரிக்கிறது. அப்பாவிகளுக்கு எதிராக கொடூரமான குற்றங்களை நிகழ்த்திவிட்டு தங்களால் தப்ப முடியாது என்பதை பயங்கரவாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.




நியூயோர்க்

## ‘மோதலை உலகம் தாங்காது’

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இராணுவ மோதலை உலகம் தாங்காது என்று, ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய ஐ.நா. சபை பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்,

"எல்லை கட்டுப்பாட்டுக் கோடு மற்றும் சர்வதேச எல்லையைத் தாண்டி இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியதற்கு ஐநா சபை பொதுச்செயலாளர் கவலை தெரிவித்துள்ளார். இரு நாடுகளும் அதிகபட்ச இராணுவ நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுக்கிறார்" என்று தெரிவித்ததாகக் கூறியுள்ளார்.



சம்பியன்ஸ் லீக்:


# பார்சிலோனாவை வெளியேற்றிய இன்டர் மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது.

இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுடனான அரையிறுதிப் போட்டியில் 6-7 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்றே பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய பார்சிலோனா, இன்டர் மிலனின் மைதானத்தில் புதன்கிழமை (07) நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 3-4 என்ற கோல் கணக்கில் மேலதிக நேரத்தில் பெறப்பட்ட கோலால் தோற்றது. வழமையான போட்டி முடிவின் இறுதி நிமிடங்களிலேயே கோலெண்ணிக்கையையும் இன்டர் மிலன் சமப்படுத்தியிருந்தது.

பார்சிலோனா சார்பாக எரிக் கர்சியா, டனி ஒல்மோ, றபீனியா ஆகியோர் தலா ஒவ்வொரு



கோலைப் பெற்றனர். இன்டர் மிலன் சார்பாக லொட்டரோ மார்டினெஸ், ஹகன் கல்ஹனொக்லு, பிரான்ஸெஸ்கோ அக்கர்பி, டேவிடே பிறெட்டசி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

ஐ.பி.எல்: விறுவிறுப்பான போட்டியில்

# மும்பையை வென்ற குஜராத்

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், மும்பையில் செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட மும்பை, மொஹமட் சிராஜ், அர்ஷாட்கான், சாய்கிஷோர் (2), ரஷீட்கான், ஜெரால்ட்கொயட்ஸி, பிரசீத் கிருஷ்ணாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் வில்ஜக்ஸ் 53 (35), சூரியகுமார் யாதவ் 35 (24), கொர்பின்பொஷ் 27 (22) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 156 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத் ஆரம்பத்தில் சாய் சுதர்ஷனை ட்ரெண்ட் போல்டிடம் இழந்த போதும் அணித்தலைவர் ஷுப்மன்கில், ஜொஸ்பட்லர் மூலம் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்தது.

பின்னர் அஷ்வனி குமார் (2), ஜஸ்பிரிட்பும்ரா(2), போல்டிடம் விக்கெட்டுகளை இழந்து தடுமாறி 18 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழைகுறுக்கிட்டமை காரணமாக 19 ஓவர்களில் 147 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இறுதிப் பந்தில் 7 விக்கெட்டுகளை இழந்து, 146 ஓட்டங்களுடன் குஜராத் காணப்பட்ட நிலையில் ரண் அவுட்டை அணித்தலைவர் ஹர்திக் பாண்டியா தவறவிட குஜராத் வென்றது.



துடுப்பாட்டத்தில் கில் 43 (46), ஜொஸ்பட்லர் 30 (27), ஷெர்ஃபேன்ருதஃபோர்ட் 28 (15) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக கில் தெரிவானார்.

இந்நிலையில், தரம்சாலாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை பஞ்சாப் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## இலங்கை அணிகளுக்கு ஸ்ரீதரின் களத்தடுப்பு நிகழ்ச்சி

இலங்கையிலுள்ள முன்னணி ஆண், பெண் அணிகளுக்கு முழுமையான 10 நாள் களத்தடுப்பு நிகழ்ச்சியொன்றை இந்தியாவின் முன்னார் களத்தடுப்புப் பயிற்றுவிப்பாளர் ஆர்.ஸ்ரீதர் நடத்தவுள்ளார்.

ஆண், பெண் தேசிய குழாம்கள், வளர்ந்து வருவோரின் குழாம்கள், பிறீமியர் கழக வீரர்கள், தேசிய 19 வயதுக்கு உட்பட்டோருக்கான அணி, பெண்களின் ஏ அணி ஆகியவற்றுடன் ஸ்ரீதர் பணியாற்றவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



## இலங்கைத் தொடருக்கு தஸ்கின் தயாராகி விடுவார்?

இலங்கைக்கான பங்களாதேஷின் சுற்றுப்பயணத்தின்போது, வேகப்பந்து வீச்சாளரான தஸ்கின் அஹ்மட் தயாராகி விடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சிம்பாப்வேக்கெதிரான தொடரை தஸ்கின் தவறவிட்டதுடன், பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளையும் தவறவிடவுள்ளார்.

இந்நிலையில், அவரது புனர்வாழ்வை வெற்றிகரமாக பூர்த்தி செய்தால் போட்டியில் பங்குபற்றுவதற்கான உடற்றகுதியை தஸ்கின் பெற்று விடுவாரெனக் கூறப்பட்ட நிலையில், ஜூன் மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு பங்களாதேஷ் வருகிறது.

## போர்த்துக்கல் குழாமில் றொனால்டோவின் மகன்

போர்த்துக்கல்லின் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான குழாமுக்காக முதற்தடவையாக கிறிஸ்டியானோ றொனால்டோவின் மகனான கிறிஸ்டியானோ ஜூனியர் புதன்கிழமை (07) அழைக்கப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியாவிலுள்ள அல்-நஸார் இளைஞர் அகடமியிலுள்ள 14 வயதான முன்களவீரரான ஜூனியர், இம்மாதம் குரோஷியாவில் நடைபெறவுள்ள தொடரொன்றுக்காக போர்த்துக்கல்லுடன் இணைந்து ஜப்பான், கிரேக்கம், இங்கிலாந்தை முதன்முறையாக எதிர்கொள்ளவுள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட், இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் இளைஞர் கழகங்களுக்காக



ஜூனியர் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜுவென்டஸில் ஜூனியர் 58 கோல்களைப் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 08, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.